


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## AUGUST

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஆகஸ்ட் - 31.08.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்
- வர்த்தக நிகழ்வுகள்












# இந்திய நிகழ்வுகள்

- சேவை, தொழில்நுட்பம், வளங்கள் மற்றும் விஞ்ஞானம் போன்ற கடல் மேம்பாட்டு நடவடிக்கைகளில் 16 துணைத் திட்டங்களை உள்ளடக்கிய **O-Smart (Ocean Services, Technology, observation, resources modeling and Science)** எனும் திட்டத்தை புவி அறிவியல் அமைச்சகம் ஒரே குடையின் கீழ் செயல்படுத்த மத்திய பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது.

- **ராஜஸ்தான் மாநிலத்தின் '24×7** மின்சார வழங்கல்' திட்டத்தின் கீழ் அதன் மின்சாரம் விநியோகத் துறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக 250 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் **(Develop Policy loan)** மத்திய அரசு, ராஜஸ்தான் மற்றும் உலக வங்கி கையெழுத்திட்டுள்ளது.

- உலகின் மிகப்பெரிய வெளிப்படையான **புதியனகாண் இயக்கத்தின் மூன்றாவது பதிப்பு - ஸ்மார்ட் இந்தியா ஹாகதான் 2019-(SIH)** என்ற பெயரில் மனிதவள மேம்பாட்டிற்கான மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் புது டெல்லியில் தொடங்கி, வைத்தார்.
  - **Smart India Hackathon 2019** (SIC- 2019)-ன் மூலம் நாட்டில் உள்ள தனியார், பொதுத்துறை தொழிற்சாலைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் ஏற்படும் தொழில்நுட்ப கேள்விகளுக்கு, இந்தியாவில் உள்ள தொழில்நுட்ப மாணவர்கள் தங்களது பதிலினை அனுப்ப ஒரு பிளாட்பார்ம் அமைத்துள்ளது.
  - இதன் மூலம் மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிக்கொணரவும் முடியும்.

- **மத்திய பிரதேச மாநிலத்தின் நீர்பாசன** மறைகள் மற்றும் அவற்றின் திறன்களை அதிகரித்து அம்மாநிலத்தில் உள்ள 'விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க **375 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் இந்திய அரசு மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி(ADB)** இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.
- குறிப்பு:
  - ADB – Asian Development Bank
  - ADB – டிசம்பர் 19, 1966ல் தொடங்கப்பட்டது.
  - இதன் தலைமையகம் பிலிப்பைன்ஸ் நாட்டின் மனிலாவில்

உள்ளது.

## உலக செய்திகள்

- பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் (SAARC – **South Asian Association For Regional Cooperation**) சார்பில், முதன் முதலாக விவசாய கூட்டுறவு வணிக மன்றம் (**Agri Cooperative Business Form**) நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்று வருகிறது.
- **இம்மன்றத்தின் கருப்பொருள்:**
  - தெற்கு ஆசியாவின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைவதற்கு பண்ணைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல் (Organizing and Strengthening Family Farmers)
- **குறிப்பு:** SAARC:
- சார்க் அமைப்பானது டிசம்பர் 8, 1985ல் வங்காளதேசத்தின் டாக்கா நகரில் தொடங்கப்பட்டது.
  - இதன் தலைமையகம் நேபாளத்தின் காத்மண்டுவில் உள்ளது.
  - Secretary General of SAARC – H.E. Mr. Amjad Hussain – B.Sail

## விளையாட்டு நிகழ்வுகள்

- இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் நடைபெற்றுவரும் 18வது ஆசிய விளையாட்டு போட்டியில் 48 ஆண்டுகளுக்குப் பிறகு **டிரிபிள் ஜம்ப்** பிரிவில் இந்தியாவின் **அர்பிந்தர் சிங் (Arpinder Sing)** 16.77மீ தொலைவுத் தாண்டி தங்கம் வென்று சாதனைப் படைத்துள்ளார்.
  - உஸ்பெகிஸ்தான் வீரர் ரஸ்லன் குர்பனோவ் வெள்ளிப்பதக்கதையும் சீன வீரர் ஷீ காவோ வெண்கலத்தையும் கைப்பற்றினர்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- டெல்லியில் நடைபெற்ற **Google for India** – வின் நான்காவது

பதிப்பில், இந்திய வட்டார செய்தி வெளியீட்டாளர்கள் ஆன்லைனில் அவர்களின் உள்ளடக்கத்தை வெளியிட உதவுவதற்காக ‘புராஜெக்ட் நாவலேகா’ **Project Navlekha** என்னும் திட்டத்தினை அறிமுகம் செய்துள்ளது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய விளையாட்டு தினம் - ஆகஸ்ட் 29**
  - ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் 29ம் தேதி இந்தியாவின் விளையாட்டு தினமாக கொண்டாடப்படுகிறது.
  - மறைந்த ஹாக்கி ஜாம்பவான் தயான் சந்த்-ஐ கௌரவிக்கும் விதமாக அவர் பிறந்த நாளின் (ஆகஸ்ட் 29, 1905) நினைவாக தேசிய விளையாட்டு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

## வர்த்தக நிகழ்வுகள்

- நடப்பு நிதியாண்டில், ஜி.டி.பி. எனப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி, **7.4 சதவீதமாக வளர்ச்சி** காணும் என ரிசர்வ் வங்கி மதிப்பீடு செய்துள்ளது.
  - ஜி.டி.பி கடந்த ஆண்டில் 6.7 சதவீதமாக இருந்தது.

We Shine Academy™